## ஜெயா பொறியியல் கல்லூரி

# முன்னாள் மாணவர்கள் சந்திப்பு

திருவள்ளூர், பிப்.1: சென்னை ஜெயா கல்வி குழும பொறியியல் கல்லூரிகளின் 15வது ஆண்டு முன்னாள் மாணவர்கள் சந்திப்பு நிகழ்ச்சி நடந்தது. விழாவிற்கு ஜெயா கல்வி குழுமத்தின் தலைவர் அ.கனகராஜ் தலைமை வகித்தார். செயலாளர் க.விஜயகுமாரி, துணை தலைவர் க.நவராஜ் முன்னிலை வகித்தனர். முன்னாள் மாணவர் மன்ற தலைவர் ஹரீஷ் வரவேற்றார்.

சிறப்பு விருந்தினராக சி.இ.ஜி. முன்னாள் மாணவர் சங்க தலைவர் இ.பி.கருணாகரன் பேசுகையில், 'கல்லூரியில் முன்னாள் மாணவர்களின் பங்கு, கல்லூரியின் வளர்ச்சி மற்றும் மாணவர்களுக்கு எல்லா விதத்திலும் உதவியாக இருக்க வேண்டும்' என்றார்.

விழாவில் சிறந்த முன்னாள் மாணவர்களுக்கும், சிறப்பு அழைப்பாளர்களுக்கும் பரிசு வழங்கி கல்லூரி குழுமத்தின் தலைவர் பேசும்போது, 'மாணவர்களுக்கும், கல்லூரிகளுக்கும் இடையிலான உறவு என்றும் தொடரும். அவர்களுக்காக கல்லூரியின் கதவு எப்போதும் திறந்தே இருக்கும்' என்றார்.

ஜெயா கல்வி குழும பொறியியல் கல்லூரிகளின் முதல்வர்கள் விஜயராகவன், கணேசன், நெடுஞ்செழியன், உதயகுமார்.

முன்னாள் முதல்வர் கந்தசாமி மற்றும் துறை தலைவர்கள், பேராசிரியர்கள், மாணவர்கள் பங்கேற்றனர். முன்னாள் மாணவ மன்ற செயலாளர் நாகராஜன் நன்றி கூறினார்.




சென்னை ஜெயா கல்விக்குழும பொறியியல் கல்லூரிகளின் முன்னாள் மாணவர்கள் சந்திப்பு நிகழ்ச்சியில், சி.இ.ஜி. முன்னாள் மாணவர் சங்க தலைவர் கருணாகரனுக்கு நினைவு பரிசை ஜெயா கல்விகுழும தலைவர் அ.கனகராஜ் வழங்கினார்.